# TRB - TAMIL

# UNIT - 8

FUTURE VISION

# பக்தி இலக்கியம்

- சங்கம் மருவிய காலத்தில் களப்பிரர் என்ற அயலவர் தமிழகத்தில் ஆட்சியைப் பிடித்தனர். கி.பி.ஆறாம் நூற்றாண்டு வரை இவர்களின் ஆதிக்கம் நீடித்தது. கி.பி.ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தென்னாட்டில் பாண்டியர்களும், தொண்டை நாட்டில் பல்லவர்களும் ஆட்சிக்கு வந்தனர். இதனால் சமண, பௌத்த சமயங்களின் ஆதிக்கம் குறைந்து சைவ, வைணவ சமயங்கள் மறுமலர்ச்சி பெற்றது. இதனால் பல்லவர் காலத்தைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் 'பக்தி இலக்கிய காலம்' என்பர். இவ்விலக்கியம் இடைக்கால இலக்கியம் என்றும் அழைக்கப்படுகின்றது.

- சைவ பக்தி இலக்கியத் தொகுப்பு 'பன்னிரு திருமுறை' என்றும், வைணவ பக்தி இலக்கியத் தொகுப்பு 'நாலாயிர திவ்வியப் பிரபந்தம்' என்றும் அழைக்கப்படுகின்றது. சைவ பாடல்களைப் 'பதிகம்' எனவும், வைணவப் பாடல்களைப் 'பாசுரம்' எனவும் அழைப்பர்.

## சைவ இலக்கியம்

- சைவ சமயம் சார்ந்த பக்தி இலக்கியம் பன்னிரு திருமுறை என்று அழைக்கப்படுகின்றது. இப்பன்னிரு திருமுறையில் முதல் பதினொரு திருமுறைகளைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி ஆவார். தொகுப்பித்தவர் முதலாம் இராஜராஜ சோழன்; இதனைத் திருமுறைச் சான்றோர் இருபத்து எழுவர் (27) பாடியுள்ளனர்.

- பன்னிரு பன்னிரண்டு; திருமுறை திரு + முறை. 'திரு' என்பது சிவத்தையும், சிவன் அருளையும், அவ்வருளால் எய்தும் பேரின்பத்தையும் குறிக்கும். 'முறை' என்பது நூல்; எனவே திருமுறை என்பதற்குச் சிவநூல், அருள்நூல், பேரின்பநூல் என்று பொருள் கூறுவர்.

  - ✓ 'திரு' என்பது சிறப்பென்னும் செம்பொருளாகிய இறைவனது அருளைச் சுட்டுவது எனப் பொருள் கொண்டு, இறைவனது அருள் பெற்ற அடியார் இயற்றிய நூல் திருமுறை என்றும் கூறுவர்.

  - ✓ இறைவன் அருளியதாகச் சொல்லப்படும் வடமொழி வேதம் 'எழுதாக் கிளவி' எனப்பட்டது. இறைவன் அருள் பெற்றவர் இயற்றிய தமிழ்ப்பாடல் 'எழுதுமறை' என வழங்கிற்று.

  - ✓ கி.பி.13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மூன்றாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டுகளில் தான் 'திருமுறை' என்ற சொல் முதன்முதலில் இடம்பெறுகின்றது.

## திருஞானசம்பந்தர் (ஒன்று, இரண்டு, மூன்றாம் திருமுறைகள்)

★ ஒன்று, இரண்டு, மூன்று ஆகிய முதல் மூன்று திருமுறைகளைப் பாடியவர் திருஞானசம்பந்தர் ஆவார். இவர் சோழ நாட்டில் (நாகப்பட்டினம் மாவட்டம்) பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், புறவம், சண்பை, காளிபுரம், கொச்சைவயம், கழுமலம், சிரபுரம் எனப் பன்னிரு திருப்பெயர்களால் அழைக்கப்பெறும் சீர்காழியில் சிவபாத இருதயருக்கும் பகவதி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தவர்; அந்தணர் குலத்தில் கவுணிய கோத்திரத்தில் பிறந்தவர்; கி.பி.ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.

★ ஒருநாள் காலை சிவபாத இருதயர் சீர்காழி குளக்கரையில் நீராடப் புறப்பட்டார். அப்போது மூன்று வயது சம்பந்தன் தாமும் உடன் வருவதாகக் தந்தையாரிடம் கூறி உடன் சென்றார். குளக்கரையில் அமரச் செய்து தந்தையார் நீராடினார். பின்பு மந்திரத்தை ஓதுவதற்காகச் சிறிது நேரம் குளத்தில் மூழ்கியிருந்தார். இந்நிலையில் தம் தந்தையைக் காணாத சம்பந்தன் கண்களில் நீர் ததும்ப 'அம்மே அப்பே' என்று அழைத்து அழுதார். திருத்தோணியப்பராகிய இறைவன் உமையம்மையுடன் எழுந்தருளினார். அப்பொழுது 'அழுகின்ற பிள்ளைக்கு முலைப்பாலைப் பொற்கிண்ணத்தில் கறந்தூட்டுக' என்று திருவாய் மலர்ந்தருளினார். உமையம்மையும் அவ்வண்ணமே பாலைப் பொழிந்து சிவஞானமாகிய அமிழ்தங் குழைத்து ஊட்டினார். அப்பொழுது,

**தோடுடைய செவியன் விடையேறிஓர் தூவெண் மதிசூடிக்**
**காடுடைய சுடலைப் பொடிபூசி என் உள்ளங்கவர் கள்வன்**
**ஏடுடைய மலரால் முனை நாள்பணிந்து ஏத்த அருள் செய்த**
**பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே**

என்று பாடினார். அதுமுதல் தன் தந்தையாரின் தோளில் அமர்ந்தவாறே தமிழ்நாட்டுச் சிவத்தலங்கள் பலவற்றிற்கும் நேரில் சென்று தேவாரப் பதிகங்களைப் பாடினார். பாணர் குலத்தைச் சேர்ந்த திருநீலகண்ட யாழ்ப்பாணரைத் தன்னுடன் அழைத்துச் சென்றார்.



FUTURE VISION

★ பெற்றோரின் விருப்பத்திற்கிணங்க தனது 16ஆம் வயதில் திருநல்லூர் நம்பாண்டர்நம்பி மகள் சொக்கியாரை மணம் முடிக்கச் சம்மதித்தார். ஆனால் திருப்பெருமணநல்லூரில் தம் 16வது வயதில் திருமணத்திற்க முன் மனைவியோடு மணக்கோலத்துடன் வைகாசித் திங்கள் மூலநாளில் இறைவனொடு கலந்தார்.

## பாடியவை

- இவர் 16,000 பதிகங்கள் பாடியதாக நம்பியாண்டார் நம்பி கூறுகிறார்; இன்று கிடைப்பன 384 பதிகங்கள் (4213 பாடல்கள்) மட்டுமே. பதிகம் என்பது பத்து அல்லது பதினொரு பாடல்களைக் கொண்டதாகும். இப்பாடல்கள் 'திருஞானசம்பந்தர் தேவாரம்' என்று அழைக்கப்படுகின்றது; இது பன்னிரு திருமுறையில் ஒன்று, இரண்டு, மூன்று ஆகிய திருமுறைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

- ஞானசம்பந்தர் அனைத்துப் பதிகங்களிலும் எட்டாவது பாடல் இராவணன் பற்றியும், ஒன்பதாவது பாடல் திருமாலும், பிரம்மாவும் காண இயலாத சிவபெருமான் பெருமையும், பத்தாவது பாடல் சமண, பௌத்த சமயங்கள் தரும் தீங்கினையும், பதினோராவது பாடல் தன் பெயரையும் ஊரையும் குறிப்பிட்டுப் பதிகம் பாடுவார் அடையும் பயன்களைக் கூறும் முறையில் அமைத்துள்ளார். பதிகங்களின் காப்பாகக் கடைசியில் அமைந்துள்ளதால் சம்பந்தர் தேவாரம் 'திருக்கடைக்காப்பு' என்று அழைக்கப்படுகின்றது.

## சிறப்புப் பெயர்கள்

♣ சம்பந்தர் என்ற இயற்பெயர் கொண்ட இவர், மூன்று வயதில் ஞானப்பால் உண்டதால் ஞானசம்பந்தன் என அழைக்கப்படுகிறார்.

♣ "நாளும் இன்னிசையால் தமிழ்ப் பரப்பும் ஞானசம்பந்தன்" எனச் சுந்தரரும், தவநெறி தழைத்தோங்க வந்த 'திராவிட சிசு' எனத் தமது சௌந்தரிய லஹரியில் ஆதிசங்கரரும், 'சைவ சிகாமணி' என நம்பியாண்டார் நம்பியும். 'தமிழாகரர்', 'முத்தமிழ் விரகன்', 'ஞானத்தின் திருவுரு' எனச் சேக்கிழாரும் பாராட்டுகின்றனர். 'பரசமய கோளரி', 'திருஞானம் பெற்ற பிள்ளை', 'காழிநாடுடைய பிள்ளை' எனக் கல்வெட்டுக்களும் பாராட்டுகின்றன.

♣ சைவ மைந்தர், பாலறாவாயன், ஞானக் குழந்தை, இன்தமிழ் ஏசுநாதர், அம்மையப்பரால் ஆட்கொள்ளப் பெற்றதால் ஆளுடையபிள்ளை, ஊரின் பெயரால் காழிவள்ளல், சண்பையர்கோன், புகலியர்கோன், கோத்திரத்தால் கவுணியர்கோன் என்றெல்லாம் அழைக்கப்படுகிறார். சைவ சமயக் குரவர் நால்வரில் ஒருவரான இவர் முருகப்பெருமானின் அவதாரமாகவே கருதப்படுகின்றார்.

♣ பெரியபுராணத்தில் சம்பந்தர் புராணம் மிகுதியான பாடல்களைப் பெற்றிருப்பதால் இவரைக் குறித்துப் 'பிள்ளைபாதி புராணம் பாதி' என்பர்.

## பாடற் சிறப்புகள்

♣ பாண்டிய நாட்டிற்குச் சம்பந்தர் புறப்பட்டபோது கோள்நிலை தீதாகயுளது என நாவுக்கரசரே எடுத்துக்காட்டிய பொழுது, 'நல்லவர்க்கு இல்லை நாளும் கோளும்' என்பதை,

**வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணை தடவி**
**மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்துஎன் உளமேபுகுந்த அதனால்**
**ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி சனிபாம்பு இரண்டுமுடனே**
**ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல அடியார் அவர்க்கு மிகவே**

என்று பாடினார்; இப்பதிகத்தை ஓதுவார்க்கக் கிரகநிலை ஏதும் செய்யாது என்ற நம்பிக்கையும் நிலவுகின்றது.

♣ தன்னை வருத்தித் தவம் செய்து வாழும் வாழ்க்கையை இப்பிறவியிலேயே பெற்றுச் சிறப்பாக வாழ முடியும் என்பதை,

**மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை**
**கண்ணில் நல்ல.ஃதுறும் கழுமல வளநகர்**
**பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே**

என்று உமையொருபாகனைச் சான்றாக்கிப் பாடுகிறார்.

நமச்சிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரமே இறைவனின் அருளைப் பெற்றுத்தரும் என்பதை,

**காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி**
**ஓதுவார் தம்மை நன்னெறிக்கு உய்ப்பது**
**வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது**
**நாதன் நாமம் நமச்சி வாயவே**

என்கிறார்.

இவரது பாடல்களில் இறைவனைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் நினைத்துக் கிளியைத் தூதனுப்பும் அகத்துறைப் பகுதியையும் காணலாம்.

**சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடுபால்**
**முறையாலே உணத்தருவன் மொய் பவளத்தொடு தரளம்**
**துறையாருங் கடற்றோணி புரத்தீசன் துளங்குமிளம்**
**பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே**

திருவாலவாய்ப் பதிகத்தில் திருநீற்றின் பெருமையை,

**மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு**
**சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு**
**தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு**
**செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே**

என்கிறார்.

திருவாரூர்ப் பதிகத்தில் நிலையாமையை வற்புறுத்தும் பாங்கு இயல்பானது.

**தந்தையார் போயினார் தாயாரும் போயினர் தாமும் போவார்**
**கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார் கொண்டு போவார்**

இயற்கை அழகு இவருடைய பாடல்களில் சிறந்து காணப்படுகின்றது.

**மான்பாய வயலருகே மரமேறி மந்திபாய மடுக்கள் தோறும்**
**தேன்பாய மீன்பாயச் செழுங்கமல மொட்டலரும் திருவையாறே.**

## ஞானசம்பந்தர் செய்த அற்புதங்கள்

- ❖ திருக்கோலக்காவில் பொற்றாளம் பெற்றா்; திருவாயிலறத் துறையில் முத்துச்சிவிகை (முத்துப் பல்லக்கு), குடை, திருச்சின்னங்கள் பெற்றார்; பட்டீச்சரத்தில் முத்துப்பந்தரும், திருவாவடுதுறையில் பொற்கிழியும், திருவீழிமிழலையில் படிக்காசும் பெற்றார்; திருப்பாச்சிலாச்சிராமத்தில் கொல்லிமழவன் மகளுக்கு உண்டான முயலகன் (Polio) என்ற நோயை நீக்கினார்; திருமருகலில் பாம்பு தீண்டிய வணிகனின் விடம் நீக்கினார்; திருமறைக்காட்டில் மூடிய கோயில் கதவுகளைப் பாடித் திறக்கச் செய்தார்; திருவோத்தூரில் ஆண்பனையைப் பெண்பனை ஆக்கினார்; மயிலாப்பூரில் இறந்துபோய்ச் சாம்பலாய் இருந்த பூம்பாவை என்னும் பெண்ணை உயிர்பெற்று எழச் செய்தார்.
- ❖ மதுரையில் தான் தங்கியிருந்த மடத்திற்குக் கூன்பாண்டியன் வைத்த நெருப்பை அவனுக்கே வெப்பு நோயாகப் பற்றச் செய்தார். பாண்டியனின் மனைவி மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் வேண்ட நீறுபூசி வெப்பு நோய் நீக்கி, கூன் நீங்கச் செய்து அவனை நின்றசீர் நெடுமாறன் ஆக்கினார்.
- ❖ மதுரையில் சமணருடன் அனல்வாதம், புனல்வாதம் புரிந்து வென்றார்; வாதுக்கு அழைத்த புத்தநந்தியின் தலை துண்டாகுமாறு செய்தார்.

## ஞானசம்பந்தரின் நெறி

- ✷ இறைவனை அடைவதற்குச் சமயக் குரவர் நால்வரும் ஒவ்வொரு நெறியைப் (மார்க்கம்) பின்பற்றினர். ஞானசம்பந்தரின் நெறி மகன்மை நெறி (சற்புத்திர மார்க்கம்) ஆகும்; இறைவனைத் தந்தையாகவும், தம்மை மகனாகவும் பாவித்துப் பாடுவதாகும். இவர் மேற்கொண்ட இத்தகைய நெறி கிரியை எனப்படுகின்றது.



FUTURE VISION

## திருநாவுக்கரசர் (நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகள்)

✷ நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளைப் பாடியவர் திருநாவுக்கரசர் ஆவார். இவர் திருமுனைப்பாடி நாட்டில் (கடலூர் மாவட்டம்) திருவாமூர் என்னும் ஊரில் புகழனாருக்கும் மாதினியாருக்கும் வேளாண் மரபில் குறுக்கையர் குடியில் பிறந்தவர்; மருள்நீக்கியார் என்பது இவரது இயற்பெயராகும்; திலகவதியார் நாவுக்கரசரின் தமக்கையார் ஆவார்.

✷ திலகவதியார்க்குப் பன்னிரண்டு வயதாகியிருந்தபோது, கலிப்பகையார் என்னும் வேளாண்குடித் தலைவருக்கு அவரை மணமுடிப்பதாக உறுதி செய்தனர். இந்நிலையில் கலிப்பகையார் தம் அரசனுக்காகப் படைத்தலைமை பூண்டு வடநாட்டிற்குப் போர் புரியச் சென்றார். அவர் போர்த் தொழிலில் காலங் கழித்திருக்கும் நாளில், புகழனார் இறக்க மாதினியாரும் உடன் உயிர் துறந்தார். கலிப்பகையாரும் சில நாள்களுக்குப் பின் போர்க்களத்திலேயே உயிர் நீத்தார்.

✷ கலிப்பகையாரது மறைவு கேட்டுத் துன்புற்று உயிர் நீக்கத் துணிந்தபோது, மருள்நீக்கியார் அவர்தம் பாதங்களில் விழுந்து 'தாயும் தந்தையும் என உம்மையே கருதி இப்போது நான் உயிர் வைத்திருக்கின்றேன். நீரும் செல்வீராயின் நான் உமக்கு முன்பு உயிர் விடுவேன்' என்று கூறி வருந்தினார். அதனால் தமக்கையார் கைம்மை நோன்பு மேற்கொண்டு தம்பியை நன்முறையில் வளர்த்து வந்தார்.

✷ வளர்ந்த பின் மருள்நீக்கியார் சமண சமயத்தைத் தழுவி, அச்சமய நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். இச்செய்தியைக் கேட்டுத் திருவதிகை வீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனிடத்து வேண்டினார்; திருவுளங் கொண்ட இறைவன் மருள்நீக்கியாருக்குச் சூலைநோய் தந்தருளினார்; அந்நோயினைத் தீர்ப்பதற்குச் சமணர் முயன்றும் பயன்கிட்டவில்லை. பின்பு தன் தமக்கையிடம் வந்தடைந்தார்; தமக்கையாருடன் திருவதிகை வீரட்டான இறைவனை,

**கூற்றாயினவாறு விலக்ககிலீர் கொடுமை பல செய்தன நானறியேன்**

என்ற பதிகத்தைப் பாடி வணங்கினார்; சூலைநோயும் தீர்ந்தது. அவரது பாமாலையைக் கேட்டு இறைவன் 'நாவுக்கரசர்' என்ற திருப்பெயரை வழங்கினார்.

✷ சமணர்கள், தம் சமயத்தைச் சார்ந்திருந்த மகேந்திரவர்ம பல்லவன் வாயிலாக நாவுக்கரசருக்குப் பல துன்பங்களை இழைக்க முற்பட்டனர். நஞ்சு ஊட்டியும், யானையின் காலால் இடறுதலும், சுண்ணாம்புக் காளவாயில் (நீற்றறை) இடுதலும், கல்லிற் கட்டிக் கடலில் தூக்கிப் போடுதலும் ஆகிய கொடுமைகளை நிகழ்த்தினர். இவை ஒன்றினாலும் துன்புறாமலும் பிழைத்தார். அரசனும் தன் பிழைகட்கு வருந்தி அவரை வணங்கிச் சைவ சமயம் சார்ந்தான். இறுதியாகத் திருப்புகலூரில் தங்கிப் பல தொண்டுகள் செய்தார்.

சித்திரைத் திங்கள் சதயநாளில் தம் 81ஆம் வயதில் நிறைவாழ்வு வாழ்ந்து இறைவனது திருவடி நிழலை அடைந்தார்.

### பாடியவை

✦ இவர் பாடியதாகக் கூறப்படும் 370 பதிகங்களில் (திருமுறை கண்ட புராணம் கூறுவது) 312 பதிகங்கள் (3066 பாடல்கள்) மட்டுமே கிடைக்கின்றன.

### சிறப்புப் பெயர்கள்

✦ நாவன்மையின் காரணமாக இறைவன் கொடுத்த பெயர் நாவுக்கரசர்; வாக்குக்கு ஈசர் என்னும் பொருளில் வாகீசர் என்றும் தாண்டகம் என்னும் பாவகையைத் தமிழில் முதன்முதலில் பாடியதால் தாண்டகவேந்தர், தாண்டக சதுரர் என்றும் தந்தையார்க்குச் சமமாக ஞானசம்பந்தர் அப்பர் என்றும் சமண சமயம் சார்ந்த போது தருமசேனர் என்றும் அழைக்கப்படுகிறார்.

✦ சூலை நோய் தந்து இவரை ஆட்கொண்டமையால் ஆளுடையை அரசு எனவும் உழவாரப் படை கொண்டு கோயில் தோறும் உழவாரப் பணி (புல் செதுக்கிச் சுத்தம் செய்தல்) மேற்கொண்டதால் உழவாரப் படையாளி எனவும் அழைக்கப்படுகிறார்.

✦ நாவின் மன்னர், சொல் அரசர், சொல் வேந்தர் என்றும் சிறப்புப் பெயரால் குறிக்கப்படுகிறார்; சைவ சமயக் குரவரில் ஒருவர்.



FUTURE VISION

**பாடற் சிறப்புகள்**

சூலை நோயோடு வந்த நாவுக்கரசரைத் தமக்கையார் திருவதிகை தலத்துக்கு அழைத்துச் சென்றபோது பாடிய முதற்பாட்டு வருமாறு.

**கூற்றாயினவாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நானறியேன்**
**ஏற்றாய்அடிக் கேஇரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்**
**தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட**
**ஆற்றேன் அடியேன் அதிகைக்கெடில வீரட்டானத்துறை அம்மானே.**

நாவுக்கரசர் மீண்டும் சைவராகிவிட்டார் என்பதை அறிந்த சமணர்கள் முதலாம் மகேந்திரவர்ம பல்லவனை அடைந்து கோள் கூற மன்னன் சினந்து இழுத்து வருமாறு கட்டளையிட்டான். அந்நிலையில்,

**நாமார்க்கும் குடிஅல்லோம் நமனை அஞ்சோம்**
**நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்**
**ஏமாப்போம் பிணி அறியோம் பணிவோம் அல்லோம்**
**இன்பமே எந்நாளும் துன்ப மில்லை**

என்று வீரத்துடன் கூறினார்.

சுண்ணாம்புக் காளவாயில் இட மன்னன் ஆணை பிறப்பித்தபோது அந்தக் கொடுமையிலும் இறைவனை நினைத்து,

**மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நீழலே**

என மனம் மகிழ்ந்து பாடுகிறார்.

கோயில்தோறும் உழவாரப் படைகொண்டு தொண்டு செய்ததைத் திருக்கடம்பூர்ப் பதிகம்,

**நங்கடம்பினைப் பெற்றவள் பங்கினன்**
**தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்**
**தன்கடன் அடியேனையும் தாங்குதல்**
**என்கடன் பணிசெய்து கிடப்பதே**

என்று விளக்ககின்றது.

அகத்துறைச் சார்ந்த காதல் பாடல்களையும் திருவாரூர்ப் பதிகத்தில் பாடியிருக்கின்றார்; அப்பாடல் வருமாறு,

**முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்**
**மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்**
**பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்**
**பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்**
**அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்**
**அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்**
**தன்னை மறந்தாள் தன் நாமங் கெட்டாள்**
**தலைப்பட்டர் நங்கை தலைவன் தாளே**

இறைவனின் நடனக் கோலத்தைக் காணும் பேறு கிட்டுமாயின் மனிதப் பிறவியும் வேண்டும் என்று பாடும் பாங்கை,

**குனிந்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண் சிரிப்பும்**
**பணித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்**
**இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே**

எனும் பாடலில் காணலாம்.

FUTURE VISION

**அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்ற நம்பிக்கைக் கொண்ட நாவுக்கரசர்,**

**ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே**
**ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடாதாரே உருகுவித்தால் ஆரொருவர் உருகாதாரே**
**பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே பணிவித்தால் ஆரொருவர் பணியாதாரே**
**காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே**

என்கின்றார்.

இறைபக்தி கொண்டிருந்த நாவுக்கரசர் சாத்திரங்கள், குலத்தில் உயர்வு தாழ்வு பேசுவதை,

**சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்**
**கோத்திரமும் குலமும் கொண்டுஎன் செய்வீர்**
**பாத்திரம் சிவமென்று பணிந்திரேல்**
**மாத்திரைக்குள் அருளுமாற் பேறரே**

என்று கூறி வன்மையாகக் கண்டிக்கின்றார்.

**கங்கை ஆடில் என்? காவிரி ஆடில் என்?**
**கொங்க தண்டுமரித் துறை ஆடில் என்?**
**ஓங்கு மாகடல் ஓதநீர் ஆடில் என்?**
**எங்கும் ஈசன் எனாதவர்க்கு இல்லையே**

என்று உண்மையை நேருற உரைத்த ஞானியாகத் திகழ்கின்றார்.

**சங்கநிதி பதுமநிதி இரண்டும்தந்து**
**தரணியொடு வானாளத் தருவரேனும்**
**மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்**
**மாதேவர்க்கே காந்தர் அல்லார் ஆகி**
**அங்கமெலாம் குறைந்து அழுகு தொழுநோயராய்**
**ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்**
**கங்கைவார் சடைக் கரந்தார்க்(கு) அன்பராகில்**
**அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே**

என்று பக்தியில் சமத்துவத்தைப் பாடுகின்றார்.

## நாவுக்கரசர் செய்த அற்புதங்கள்

- திங்களூரில் பாம்பு தீண்டி இறந்த அப்பூதியடிகளின் மகனை உயிர்பெறச் செய்தார்; திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் கண்டார்; திருவீழிமிழலையில் படிக்காசு பெற்றார்; திருமறைக்காட்டில் பதிகம் பாடி மூடியிருந்த கோயில் கதவைத் திறக்கச் செய்தார்; பெண்ணாகடத்தில் சூலமும் இடபமும் ஆகிய குறிகளைத் தம் மேனியிற் பொறிக்கும்படி இறைவனை வேண்டி, அவ்வாறே அக்குறிகள் இடம்பெற்றார்.

## நாவுக்கரசரின் நெறி

- இவர் நெறி அடிமை நெறி (தாசமார்க்கம்) ஆகும். இறைவனை ஆண்டவனாகவும் தம்மை அடிமையாகவும் பாவித்துப் பாடுகிறார். இவர் மேற்கொண்ட இந்த நெறி சரியை எனப்படுகிறது.

## சுந்தரர் (ஏழாம் திருமுறை)

- ஏழாம் திருமுறையைப் பாடியவர் சுந்தரர் ஆவார். திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரில் சடையனார்க்கும் இசைஞானியார்க்கும் மகனாக அந்தணர் குலத்தில் பிறந்தவர். இயற்பெயர் நம்பி ஆரூரார் என்பதாகும்.

- மன்னன் நரசிங்க முனையரையர், இவரைச் சிறுதேர் உருட்டி விளையாடும் பருவத்தில் கண்டார். தம் வளர்ப்புப் பிள்ளையாகத் தருமாறு இவர்தம் பெற்றோரிடம் வேண்டிப் பெற்று வளர்த்து வந்தார்.

- கயிலையில் சிவபெருமான் அணுக்கத் தொண்டராக விளங்கிய ஆலாலசுந்தரர், உமையம்மையின் சேடிப் பெண்களாக விளங்கிய கமலினி, அனிந்திதை என்பாரைக் கண்டு மனம் மயங்கியதால், பூவுலகில் பிறந்து அவர்களை மணந்து இல்லறம் நடத்திப் பின் கயிலை வந்தடையுமாறு இறைவனால் பூவுலகுக்க அனுப்பப்பட்டார். அப்பொழுது பிற மாதரை மணக்க நேரின் தன்னைத் தடுத்தாட்கொள்ள வேண்டுமென்று ஆலாலசுந்தரர் வேண்டிக் கொண்டார்.

FUTURE VISION

- இவர் திருமணப் பருவம் எய்தியபோது, பெற்றோர் புத்தூர்ச் சடங்கவி சிவாசாரியார்தம் மகளை மணஉறுதி செய்வித்தனர். திருமண நாளில், மணத்தவிசிலிருந்த ஆரூராரிடம் முதிய மறையவர் வேடத்தில் தோன்றிய சிவபெருமான் நெருங்கி, அவ்வாரூரர் தமக்கு வழிவழி அடிமை என்றார். மணப்பந்தலில் இருந்தோர் திடுக்கிட்டனர். ஆரூரர் நகைத்து, "அந்தணர் ஒருவர் மற்றோர் அந்தணர்க்கு அடிமையாதல் உண்டோ? மறையோனாகிய நீர் பித்தரோ?" என்றார். முதியவர், "யான் பித்தனோ பேயனோ, உன் பாட்டன் எழுதித் தந்த ஓலையை இதோ காண்" எனக்கூற, ஆரூரர் அவ்வோலையை வலிந்து பற்றிக் கிழித்து எறிந்தார். அவையிலிருந்தவர்கள் "உலகில் இல்லாத வழக்கினைக் கொண்டு வந்த நீர் எவ்வூரர்?" என்றனர். வேதியர், இவ்வூர்க்கு அண்மையில் உள்ள திருவெண்ணெய்நல்லூர் என்றார். இவ்வோலையைக் கிழித்தெறிந்தமையால் தான் அடிமையென்பதை இவன் உறுதிப்படுத்திவிட்டான் எனக் கூறினார்.

- ஆரூரர் முதியவரை நோக்கித் "திருவெண்ணெய்நல்லூரிலேயே இவ்வழக்கைத் தீர்த்துக் கொள்வோம்" எனக்கூறி அவருடன் சென்றார்; சுற்றத்தாரும் பின் சென்றனர். வெண்ணெய்நல்லூர்ச் சபையில் தம் வழக்கையுரைத்து மூலவோலை என ஒன்றை வேதியர் காட்டினார். திருநாவலூரில் வாழும் அருமறை வல்ல ஆதி சைவனாகிய ஆரூரன் எழுதியது. வெண்ணெய்நல்லூரில் வாழும் முனிவர் பெருமானாகிய பித்தனுக்கு யானும் என் குடும்பத்தில் வழிமுறை வழிமுறையாக வருபவர்களும் அடித்தொண்டு செய்வதற்கு இதுவே ஆவண ஓலையாகும். இருதிறத்தோமும் உள்ளம் ஒத்த நிலையில், இதனை எழுதிக் கொடுத்தேன்; இதற்கு இவை என் கையெழுத்து என்று அவ்வோலையில் எழுதிக் கையெழுத்திட்டிருந்தார் ஆரூரர்தம்பாட்டனார். அவையோர், அக்கையெழுத்தையும் சான்று இட்டோர் கையெழுத்துக்களையும் வேறு பிரதிகளுடன் ஒப்பிட்டு நோக்கினர். இறுதியில் ஆரூரர் அம்மறையவர்க்க அடிமையே எனத் தீர்ப்ப வழங்கினர்.

- பின்னர், அவையோர் முதியவரை நோக்கி, "நீர் இவ்வூரில் வாழும் இடத்தைக் காட்டுக" என வேண்டினர். அவர் ஊர் மக்களைத் தம்முட் அழைத்துச் சென்று அவ்வூர்க் கோயிலுள் புகுந்து மறைந்தார்; உமாதேவியாருடன் விடையின் மீது காட்சியளித்தார்.

- தாம் முன்பு சொன்னதுபோலத் தடுத்தாட் கொண்டதாகத் திருவாய் மலர்ந்தார். ஆரூரர் தம் பிழைக்க வருந்த இறைவன், 'இன்றுமுதல் நீ வன்தொண்டன்' என்று அழைக்கப்படுவாய் என்றார். பித்தன் என்று நம்மை விளித்தமையால், அப்பெயராலேயே பாடுக என்று அருள் செய்தார். ஆரூரரும்,

**பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா**
**எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை**
**வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருள்துறையுள்**
**அத்தா உனக்காளாய் இனி அல்லேன் எனலாமே**

என்று பாடினார்.

- இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்டுப் பல தலங்கள்தோறும் சென்று இறைவனைப் பாடி பதிகம் இயற்றி வந்தார். அவ்வமயம் திருவாரூரில் கணிகை குலத்தைச் சார்ந்த பரவையாரைக் காதல் மணம் புரிந்து கொண்டார். திருவொற்றியூரில் வேளாளர் குலப்பெண்ணான சங்கிலிநாச்சியாரை இரண்டாம் மனைவியாகத் திருமணம் புரிந்து வாழ்ந்தார்.

- கி.பி.ஏழாம் நூற்றாண்டின் இறுதியிலும், கி.பி.எட்டாம் நூற்றாண்டின் முதற்பகுதியிலும் வாழ்ந்தவர். ஆடித் திங்கள் சுவாதி நாளில் தம் 18ஆம் வயதில் கயிலையை அடைந்தார்.

**பாடியவை**

- கிடைப்பன 100 பதிகங்கள் (1026 பாடல்கள்). இப்பாடல்கள் அனைத்தும் ஏழாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

- இவர் பாடிய தேவாரப் பகுதியான திருத்தொண்ட தொகையே நம்பியாண்டார்நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி பாடவும், சேக்கிழார் பெரியபுராணம் பாடவும் காரணமாய் அமைந்தது.

**சிறப்புப் பெயர்கள்**

- நம்பி ஆரூரர் என்பது இயற்பெயராகும். கயிலையில் இருந்தபோது ஆலால சுந்தரர், நாவலூரில் பிறந்தமையால் நாவலூரார், சிவபெருமானுக்குத் தோழர் என்பதால் தம்பிரான் தோழர், சேரமான் பெருமாள்நாயனாரின் நண்பர் என்பதால் சேரமான் தோழர், இறைவனை வன்சொற்களால் வசைபாடியதால் வன்தொண்டர் என்றெல்லாம் அழைக்கப்படுகிறார்.

- ஆரூரர், சுந்தரமூர்த்தி நாயனார், சுந்தரமூர்த்தி சுவாமிகள், ஆளுடையநம்பி என்ற பிற பெயர்களும் உண்டு; சைவ சமயக் குரவர் நால்வரில் மூன்றாமவர்.

FUTURE VISION

**பாடற் சிறப்புகள்**

மன்னர்களைப் பாடுவதை விடுத்து, இறைவனைப்பாட வருமாறு புலவர்களை அழைக்கின்றார்.

**மிடுக்கி லாதானை வீமனே விறல்**
**விசயனே வில்லுக்கு இவனென்று**
**கொடுக்கிலாதானைப் பாரியே என்று**
**கூறினும் கொடுப்பார் இல்லை**
**பொடிக்கொள் மேனிஎம் புண்ணியன்புக**
**லூரைப் பாடுமின் புலவீர்காள்**
**அடுக்கமேலமர் உலகம் ஆள்வதற்கு**
**யாதும் ஐயுறவில்லையே.**

**நலமிலாதானை நல்லனேயென்று நரைத்த மாந்தரை இளையேனே**
**குலமிலாதானைக் குலவனே என்று கூறினும் கொடுப்பாரிலை**
**புலமெலாம் வெறிகமழ் பூம்பனலூரைப் பாடுமின் புலவீர்காள்**
**அலமரா தமரருலகு ஆள்வதற்கு யாதுமையற வில்லையே.**

- திருவோணகாந்தன் தனிப்பாடலில், உம்மையே நம்பியிருப்பவர்களை மோசம் செய்கிறீரே? மதியுடையவர்களைப் போல் நடந்து கொள்ளவில்லையே! ஆபத்துக் காலத்தில் உம்மை ஒற்றிவைத்துக் கடன்பெற்று உண்ண முடியுமா? எனக் கேட்கும் அளவு இவருக்கு ஆண்டவனிடம் உரிமையுணர்வு வாய்த்திருந்தது.

**பெற்ற போழ்தும் பெறாத போழ்தும்**
**பேணி உம்கழல் ஏத்து வார்கள்**
**மற்றோர் பற்றிலர் என்றிரங்கி**
**மதியுடையவர் செய்கை செய்யீர்!**
**அற்ற போழ்தும் அலந்த போழ்தும்**
**ஆவற்காலத் தடிகேள் உம்மை**
**ஒற்றிவைத்திங்கு உண்ணலாமோ?**
**ஓன காந்தன் தனியுளீரே.**

சைவச் சான்றோர்கள் உள்ளம் நெகிழும் பாடல்,

**பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து**
**மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே**
**மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே**
**அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே**

என்ற திருமழபாடி திருப்பதிகப் பாடலாகும்.

மன்னன் மகனாக அனைத்து இன்பங்களும் பெற்று வாழ்ந்தவர் சுந்தரர். இறைவன் தடுத்தாட்கொண்டபின்,

**வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்**
**பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்த பறிதான்**
**தாழாது அறம் செய்மின் தடங் கண்ணன் மலரோனும்**
**கீழ்மேலுற நின்றான்திருக் கேதாரம் எனீரே**

என்று பாடும் மனப்பக்குவம் கொண்டார்.

**சுந்தரர் செய்த அற்புதங்கள்**

- 12 ஆயிரம் பொன்னை விருத்தாசலம் மணிமுத்தாற்றில் போட்டுத் திருவாரூர் கமலாலய குளத்தில் எடுத்தார்; இருகண் பார்வை இழந்து, காஞ்சியில் ஒரு கண்ணையும் திருவாரூரில் மற்றொரு கண்ணையும் பெற்றவர்; அவிநாசியில் முதலை உண்ட பாலகனைப் பதிகம்பாடி மீட்டவர்; சேரமான்பெருமாள் நாயனாரோடு வெள்ளை யானை மீது அமர்ந்து கயிலைச் சென்றவர்; குண்டையூரில் நெல்மழை பெற்றார்; திருவையாற்றில் ஆற்றுநீர் விலகி வழிவிடச் செய்தார்; திருப்புகலூரில் செங்கல்லைப் பொன்னாக மாற்றினார்; ஊடல் கொண்ட பரவையாரிடம் சிவபெருமானை இருமுறை தூதாக அனுப்பினார்; திருவாரூரில் விறன்மீண்டார் காரணமாகத் திருத்தொண்டத் தொகையை அருளினார்.



FUTURE VISION

### சுந்தரரின் நெறி

- சுந்தரர் தோழமை நெறியைச் (சக மார்க்கம்) சார்ந்தவர். இறைவனைத் தோழனாகப் பாவித்துப் பாடியவர். இத்தகைய நெறி யோகம் எனப்படும்.

### தேவாரம்

- ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய பாடல்களை 'மூவர்தமிழ்' என்பர். ஞானசம்பந்தர் பாட்டில் அன்புத் தமிழும், நாவுக்கரசர் பாட்டில் அனுபவத் தமிழும், சுந்தரர் பாட்டில் தோழமைத் தமிழும் சிறப்பாக அமைந்துள்ளன. இவர்கள் மூவரும் பாடிய பாக்கள் தேவாரம் என அழைக்கப்படுகிறது.

- தேவாரம் - தே + ஆரம் எனப் பிரிக்கப்பட்டு (தே - இறைவன், ஆரம் - மாலை) இறைவனுக்குச் சூட்டப்படும் பாமாலை என்றும், தே + வாரம் எனப் பிரித்து (தே - இறைவன், வாரம் - இசை) இறைவனை இசைப்பாக்களால் ஏத்தும் நூல் என்றும் பொருள் கூறுவர்.

- மூவர் அருளிய தேவாரம் முதன் முதலில் திருப்பதிகம், திருப்பதியம் என்ற பெயரில் வழங்கப்பட்டது. கி.பி.750இல் வரையப்பட்ட நந்திவர்மபல்லவனின் திருவல்லம் கோயிற் கல்வெட்டுத் 'திருப்பதிகம்' என்ற சொல்லையே வழங்குகிறது.

### மாணிக்கவாசகர் (எட்டாம் திருமுறை)

- இவர் பாண்டிய நாட்டு (மதுரை மாவட்டம்) திருவாதவூரில் சம்புபாதசாரியார் சிவஞானவதியாருக்கு மகனாக ஆதிசைவ மரபில் அந்தணர் குலத்தில் பிறந்தவர்.

- இவர் அறிவாற்றலில் சிறந்து விளங்கியதால் அரிமர்தனப் பாண்டியன் என்ற மன்னனிடம் அமைச்சராய்ப் பணியாற்றினார். மன்னனுக்காகக் குதிரை வாங்க வேண்டி நிறையப் பொன்னுடன் கீழைக்கரைக்குச் சென்றபோது வழியில் திருப்பெருந்துறையில் (ஆவுடையார் கோயில்) குருந்த மரத்தடியில் இறைவனால் ஞானாசிரியனாய் வெளிப்பட்டு உபதேசம் செய்யும் வாய்ப்பினைப் பெற்றார். இதனால் தாம் மேற்கொண்டு வந்த பணியை மறந்தார். அதனால் சினமுற்ற பாண்டியன் இவரைச் சிறையிலடைத்தான். இறைவன் இவர் பொருட்டு நரியைப் பரியாக்கியும், பரியை நரியாக்கியும், வைகை நதியைப் பெருக்கெடுக்கச் செய்தும், பிட்டு வாணிச்சி வந்திக் கூலியாளாக வந்து மண் சுமந்தும் திருவிளையாடல்கள் பல புரிந்தார்.

- கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்று பெரும்பாலானோர் கூறுவர். கி.பி.மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என மறைமலையடிகளும் கா.சு.பிள்ளையும் கூறுவர்.

### பாடியவை

- இவர் பாடிய நூல்கள் திருவாசகம், திருக்கோவையார் ஆகும். இவை எட்டாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

- திருவாசகம் சிவபுராணம் முதல் அச்சோப் பதிகம் ஈறாக 51 பகுதிகளைக் கொண்டது; 659 பாடல்களை உடையது.

- "திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்ற பழமொழி திருவாசகத்தின் பெருமையை உணர்த்தும். திருவாசகத்தின் ஒரு பகுதியான 'திருவெம்பாவை' தனிநூல் போல் சிறப்பித்துச் சொல்லும் மரபு உண்டு; இந்நூலை ஞானநூல், சைவ வேதம், தமிழ் வேதம் என்றும் சிறப்பிப்பர்.

- திருக்கோவையார் இறைவனைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் பாவித்து அகப்பொருள் துறைகள் அமைத்துப் பாடப்பெற்ற நூலாகும். "பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக" என்று இறைவனே கேட்டுக் கொண்டதற்கு இணங்க இந்நூலைப் பாடினார் என்பர். 400 பாடல்கள் இதில் உள்ளன. இதனைத் திருச்சிற்றம்பலக் கோவை, ஆரணம், ஏரணம், எழுத்து, இராஜாக்கோவை, காம நன்னூல், ஆகமத்தின் காரணம் என்றெல்லாம் சிறப்பிப்பர்.

FUTURE VISION

### சிறப்புப் பெயர்கள்

★ இயற்பெயர் அறியப்படவில்லை; ஊரின் பெயரால் திருவாதவூரர் என்பது இயற்பெயர் என்பர். அரிமர்த்தன பாண்டியன் 'தென்னவன் பிரம்மராயன்' என்னும் பட்டத்தைக் கொடுத்தான்.

★ மாணிக்கவாசக சுவாமிகள், மாணிக்கவாசகப் பெருமான், பெருந்துறைப் பிள்ளை, வாதவூரடிகள், ஆளுடைய அடிகள் என்றும் அழைக்கப்படுகிறார்.

★ பெரியோர்களால் 'அழுது அடியடைந்த அன்பர்' எனப் போற்றப்படுகின்றார். சைவ சமயக் குரவர் நால்வரில் ஒருவர்.

★ மாணிக்கவாசகரது பாடலின் இனிமையையும் உள்ளத்தை உருக்கும் தன்மையையும் உணர்ந்த வள்ளலார்,

**வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை**
**நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே**
**தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவை கலந்துஎன்**
**ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே**

என்று புகழ்ந்து பாடுகிறார்.

திருவாசகம் ஓதும்போது ஏற்படும் மெய்ப்பாடுகளை,

**வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி**
**நெஞ்சம் நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம்**
**திருவா சகம்இங்கு ஒருகால் ஓதின்**
**கருங்கல் மனமும் கரைந்துஉகக் கண்டேன்**
**தொடுமணல் கேணியின் சுரந்தநீர் பாய**
**மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்ப எய்தி**
**அன்பர் ஆகுநர் அன்றி**
**மன்பதை உலகின் மற்றையர் இலரே**

என்று சிவப்பிரகாசர் சிறப்பித்துக் கூறுகிறார்.

### பாடற் சிறப்புகள்

இறைவன் தமக்குச் சிவபதம் அளித்த சிறப்பினை,

**அம்மையே அப்பா ஒப்பிலா மணியே**
**அன்பினில் விளைந்த ஆரமுதே**
**பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்**
**புழுத்தலைப் புலையனேன் தனக்குச்**
**செம்மையே ஆய சிவபதம் அளித்த**
**செல்வமே சிவபெரு மானே**
**இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கெழுந்து அருளுவது இனியே**

என்று பாடியுள்ளார்.

அழாத போதும் பிள்ளையை நினைந்து பாலூட்டும் தாய் உத்த பேரன்பினன் இறைவன் என்பதை,

**பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்**
**பரிந்து நீ பாவியே னுடைய**
**ஊனினை உருக்க உள்ளொளி பெருக்கி**
**உவப்பிலா ஆனந்தம் ஆய**
**தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த**
**செல்வமே! சிவபெருமானே**
**யான்உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கெழுந் தருளுவது இனியே**

என்கிறார்.



FUTURE VISION

உற்றார், ஊர், கற்றார் வேண்டாம்; இறைவனின் திருவடி மட்டுமே போதும் என்பதை,

**உற்றாரை யான் வேண்டேன்**
**ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்**
**கற்றாரை யான் வேண்டேன்**
**கற்பனவும் இனி அமையும்**
**குற்றாலத்து அமர்ந் துறையும்**
**கூத்தா! உன் குரை கழற்கே**
**கற்றாவின் மனம் போலக்**
**கசிந்து உருக வேண்டுவனே**

என்று மனம் கசிய பாடுகிறார்.

பல பிறவிகள் பிறந்து இளைத்து வருந்துவதாகப் பாடுகிறார்; இப்பாடலில் உயிர்கள் தோற்றம் பற்றிய செய்தி வருவது குறிப்பிடத்தக்கது.

**புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்**
**பல்விருக மாகிப் பறவையாம் பாம்பாகிக்**
**கல்லிய மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல்லரசு ராகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லா நின்றஇந் தாவர சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமானே.**
**யானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்**
**ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே**

என்று தன்னைக் குறித்து இறைவனிடம் வேண்டிப் பாடுகிறார்.

ஐம்பூதங்களாக இறைவன் இருக்கின்றான் என்பதை,
**வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி**
**ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்**
**கோனாகி யான்எனதென்று அவரவரைக் கூத்தாட்டு**
**வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே**

என்று கூறுகிறார்.
**நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க**
**இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க**
**கோகழி ஆண்ட குருமனிதன் தாள் வாழ்க**
**ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க**

என்று சிவபுராணத்தில் பாடுகிறார்.

**ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்**
**சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்**
**மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்**
**ஈதேஎம் தோழி பரிசுஏலோர் எம்பாவாய்**

என்று இறைவனின் பெருமையைக் கேட்ட பின்பும் தலைவி உறங்கிக் கொண்டிருக்கிறாளே என்று திருவெம்பாவையில் பாடுகின்றார்; இப்பாடல் புகழ்பெற்றதாகும்.

அகத்துறைச் சார்ந்த திருக்கோவையாரில் இறைவனின் பெருமையைக் கூறும் பாங்கு சிறப்பானது.

**ஆனந்த வெள்ளத்து அழுந்தும் ஓர் ஆருயிர் ஈருருக் கொண்டு**
**ஆனந்த வெள்ளத்திடை திளைத்தால் ஒக்கும் அம்பலம் சேர்**
**ஆனந்த வெள்ளத்து அறை கழலோன் அருள் பெற்றவரின்**
**ஆனந்த வெள்ளம் வற்றாது முற்றாது இவ்வணி நலமே.**

**நாமார்க்கும் குடிஅல்லோம் நமனை அஞ்சோம்**

என்ற நாவுக்கரசரின் அடிகளை ஒக்கும் வகையில் திருச்சதகத்தில் மாணிக்கவாசகரும் பாடியுள்ளார்; அவ்வடிகள் வருமாறு:



FUTURE VISION

**யாமார்க்கும் குடியெல்லாம் யாதும் அஞ்சோம்**
**மேவினோம் அவனடியால் அடியா ரோடும்.**

**முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே**
**பின்னைப் புதுமைக்கும் போர்த்தும் அப்பெற்றியனே**
**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

என்ற பாடல் அடிகளும் தமிழகத்தில் புகழ்பெற்றவை.

## மாணிக்கவாசகரின் நெறி

- இவரின் நெறி ஞானநெறி (சன்மார்க்கம்) ஆகும். இறைவனை ஞானக் குருவாய்ப் பாவித்தவர்; இதனை ஞானம் என்பர்.

## ஒன்பதின்மர் (ஒன்பதாம் திருமுறை)

1. திருமாளிகைத்தேவர்
2. சேந்தனார்
3. கருவூர்த் தேவர்
4. பூந்துருத்தி நம்பி காடவநம்பி
5. கண்டராதித்தர்
6. வேணாட்டடிகள்
7. திருவாலிஅமுதனார்
8. புருடோத்தம நம்பி
9. சேதிராயர்

ஆகிய ஒன்பதின்மரும் பாடிய பாடல்களின் தொகுப்பே ஒன்பதாம் திருமுறையாகும்; இத்திருமுறை நூல்கள் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என அழைக்கப்படுகின்றன. இவற்றில் 29 பதிகங்கள் (301 பாக்கள்) உள்ளன. ஒன்பதின்மரில் சேந்தனார் மட்டுமே திருப்பல்லாண்டு பாடியுள்ளார்.

## திருமூலர் (பத்தாம் திருமுறை)

- பத்தாம் திருமுறையைப் பாடியவர் திருமூலர் ஆவார்; இவர் சித்தர்களில் தலைமை சான்றவர்; கி.பி.ஆறாம் நூற்றாண்டுவாக்கில் வாழ்ந்தவர் என்று கூறுவர்; இவரைப் பற்றி நிறைய கதைகள் புனையப்பட்டுள்ளன; இவை நம்புவதற்கில்லை.

- திருமூலர் எழுதிய நூல் திருமந்திரம் ஆகும். இந்நூல் ஒன்பது தந்திரங்களாகவும் 232 அதிகாரங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது; 3000 பாக்களைக் கொண்டுள்ளது. திருமந்திரமாலை, தமிழ் மூவாயிரம் என்ற சிறப்புப் பெயர்களும் இந்நூலுக்குண்டு.

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே**

என்று அன்பும் சிவமும் ஒன்றெனக் கூறி, அன்புள்ள இடத்தில்தான் இறைவன் குடிகொண்டிருப்பான் என்கிறார்.

பெரிய பதவியில், செல்வத்தில் பெருமைப்பட வாழ்ந்தாலும் இறந்துவிட்டால் பிணம் என்ற பெயரைச் சூட்டி எவ்வளவு வேகமாய்க் காரியங்களைச் செய்கின்றார்கள் என்பதை,

**ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்**
**பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்**
**சூரையம் காட்டிடை கொண்டுபோய்ச் சுட்டிட்டு**
**நீரினால் மூழ்கி நினைப் பொழிந்தவர்கள்**

என்கின்றார்.

**உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே**

என்று உடல், உயிர், ஞானம் இவற்றின் தொடர்பு பற்றிய கருத்தை விளக்குகின்றார்.

FUTURE VISION

## பன்னிருவர் (11ஆம் திருமுறை)

பதினோராம் திருமுறை பன்னிருவர் பாடிய நூல்களின் தொகுப்பாகும்.

| | |
|---|---|
| **திருவாலவாயுடையார் - 1** | **அதிராஅடிகள் - 1** |
| **காரைக்கால் அம்மையார் - 4** | **இளம்பெருமான் அடிகள் - 1** |
| **கல்லாடதேவ நாயனார் - 1** | **ஐயடிகள் காடவர் கோன் - 1** |
| **நக்கீரதேவ நாயனார் - 10** | **சேரமான்பெருமாள் நாயனார் - 3** |
| **கபிலதேவ நாயனார் - 3** | **பட்டினத்தடிகள் - 5** |
| **பரணதேவ நாயனார் - 1** | **நம்பியாண்டார் நம்பி - 10** |

ஆகிய பன்னிருவர் பாடிய 41 நூல்கள் பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ளன; இத்திருமுறைக்குப் ‘பிரபந்த மாலை’ என்ற சிறப்புப் பெயருமுண்டு.

## சேக்கிழார் (பன்னிரண்டாம் திருமுறை)

- பன்னிரண்டாம் திருமுறையைப் பாடியவர் சேக்கிழார் ஆவார். இவரின் இயற்பெயர் அருண்மொழித்தேவர் என்பதாகும். கி.பி.12ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். தொண்டை நாட்டுக் குன்றத்தூரில் தோன்றியவர். அநபாயச் சோழன் எனப்படும் இரண்டாம் குலோத்துங்கச் சோழனின் அமைச்சராய் இருந்தவர். அம்மன்னன் இவருக்கு ‘உத்தம சோழப் பல்லவன்’ எனும் பட்டம் வழங்கி சிறப்பித்தான்.

- மன்னன் சமண நூலான சீவக சிந்தாமணியில் பற்று வைத்ததால், மன்னனைச் சைவ சமயத்திற்கு மாற்ற பெரியபுராணம் பாடினார் என்பர்.

- திருத்தொண்டர் புராணம் என்பது சேக்கிழார் சூட்டிய பெயராகும். பெரியவர்களின் புராணம் என்ற பொருளில் பிற்காலத்தில் திருத்தொண்டர் புராணம் ‘பெரியபுராணம்’ என அழைக்கப்படலாயிற்று. திருத்தொண்டர் மாக்கதை என்று கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.

- சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகை (11 பாடல்கள்) முதல் நூலாகவும், நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி (89 பாடல்கள்) வழி நூலாகவும் விளங்க பெரியபுராணம் (4286 பாடல்கள்) சார்பு நூலாக அமைகின்றது.

- பெரியபுராணத்தைத் தில்லையில் அரங்கேற்றம் செய்தார். இந்நூலைக் கேட்டு மகிழ்ந்த மன்னன் யானையின் மீது சேக்கிழாரையும், நூலையும் ஏற்றி வைத்து, தானும் அருகிலிருந்து கவரிவீச நகர்வலம் வந்து, சேக்கிழாருக்குத் ‘தொண்டர்சீர் பரவுவார்’ என்னும் பட்டமளித்துப் பாராட்டினான்.

- தனி அடியார் 63 பேர், தொகை அடியார் ஒன்பதின்மர் ஆகியோரைப் பற்றிப் பேசுகின்றது இந்நூல். ஊரால், நாட்டால், தொழிலால், இனத்தால் மாறுபட்ட சைவ அடியார்களை ஒன்றுசேரப்பாடி சேக்கிழார் புரட்சியை ஏற்படுத்தினார். இந்நூலை அ.ச.ஞானசம்பந்தன் ‘தேசியக் காப்பியம்’ என்று சிறப்பிக்கின்றார்.

- சேக்கிழார் மீது உமாபதி சிவாச்சாரியார் ‘சேக்கிழார் புராணம்’ பாடியுள்ளார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, “பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ” என்று பாராட்டுகின்றார்.

## சைவ சித்தாந்த சாத்திரங்கள்

- சைவ சமயப் பன்னிரு திருமுறைகள் தோத்திர நூல்கள் என்று போற்றப்பெறுவதுபோல், சைவ சமயத் தத்துவத்தை விளக்கும் பதினான்கு நூல்கள் சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் என்று போற்றப்படுகின்றன. இதனைச் ‘சைவ சமய சாத்திர நூல்கள்’, ‘சைவ சித்தாந்த நூல்கள்’, மெய்கண்ட சாத்திரங்கள்’, ‘மெய்கண் நூல்கள்’, ‘அநுபூதி நூல்கள்’ என்றெல்லாம் அழைப்பர். இவை கி.பி.12,13,14ஆம் நூற்றாண்டைச் சார்ந்தனவாகும்.

- பதியாகிய இறைவனைப் பசுவாகிய ஆன்மா அடைய முயலும்போது பாசம் சேர ஒட்டாது தடுக்கின்றது. பாச வினையறுத்துச் சிவபதம் எய்தும் நெறியைப் புகட்டுவன இச்சாத்திர நூல்கள்; இப்பதினான்கையும் குறிக்கும் பழைய வெண்பா வருமாறு:

**உந்தி, களிறே, உயர்போதம், சித்தியார்,**
**பிந்திருபா, உண்மை, பிரகாசம் - வந்த அருள்,**
**பண்புவினா, போற்றி, கொடி, பாசமிலா நெஞ்சுவிடு,**
**உண்மைநெறி, சங்கற்பம் உற்று.**

FUTURE VISION

- திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபா இருப∴து, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் ப∴றொடை வெண்பா, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பன அப்பதினான்கு நூல்கள்.

- சைவ சித்தாந்த கருத்துக்களைப் பற்றி டாக்டர் ஜி.யு.போப், ''திராவிடர்களின் அறிவாற்றலின் விளைவு'' என்றும், ''இந்தியாவிலுள்ள எச்சமயத்தினும் விரிவானதும், செல்வாக்குப் பெற்றதும் மதிப்பு வாய்ந்ததுமாம்'' (தமிழ் இலக்கிய வரலாறு, சி.பாலசுப்பிரமணியன்) என்றும் பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## 1. திருவுந்தியார்

- ♣ இதனை இயற்றியவர் திருவியலூர் உய்யவந்த தேவநாயனார். கி.பி.12ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். ஒவ்வொரு பாட்டிலும் 'உந்தீபற' என வருதலாலும், 'திரு' என்னும் அடைமொழியும், ஆர் விகுதியும் பெற்றுத் திருவுந்தியார் என்று பெயர் பெறுகின்றது. உந்தீபற – உந்துதல், குதித்தல்; அதாவது மகளிர் இருவர் கூடி விளையாடும் பாங்கில் இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. 45 கலித்தாழிசைப் பாடல்களைக் கொண்டது இந்நூல்.

## 2. திருக்களிற்றுப்படியார்

- ♣ திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் மாணாக்கர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் இந்நூலின் ஆசிரியர். இவரும் கி.பி.12ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.

- ♣ தில்லை நடராஜப் பெருமானின் கோயிலில் உள்ள கல்லாலான களிற்றுப்படியில் வைத்துப் பாடப்பட்டமையாலும், கல்லால் அமைந்த களிறு தம் துதிக்கையில் இந்நூலை எடுத்து இறைவனின் திருப்பாதங்களில் வைத்ததாலும், 'திரு' என்னும் அடைமொழியும் 'ஆர்' என்னும் விகுதியும் பெற்றுத் திருக்களிற்றுப்படியார் ஆயிற்று. 100 வெண்பாக்களைக் கொண்டது இந்நூல். அறுபத்து மூன்று நாயன்மார்கள் வாழ்க்கை வரலாற்றிலிருந்து சில செய்திகளை விளக்கும் போக்கில் இந்நூல் அமைந்துள்ளது. திருக்குறள் மேற்கொள்ளும் இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளன.

## 3. சிவஞானபோதம்

- ♣ இந்நூலை அருளியவர் மெய்கண்டார் (மெய்கண்ட தேவர்). கி.பி.13ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தவர். திருவெண்ணெய் நல்லூரைச் சார்ந்த இவர், பரஞ்சோதி முனிவரிடம் உபதேசம் பெற்றவர். வேளாளர் மரபில் அச்சுதகளப்பாளரின் மகனாகப் பிறந்தவர்.

- ♣ போதம் - அறிவு, நூல் என்பது பொருளாகும்; சிவஞானபோதம் என்பதற்கு ஒப்பற்ற மெய்ப்பொருளாகிய சிவபெருமானை அறிந்து தெளிதலுக்குரிய நூல் என்பது பொருள்படும். சைவ சித்தாந்த சாத்திர நூல்களில் முதன்மையானது சிவஞானபோதமாகும். சைவ சித்தாந்த முதல்வர் என்று மெய்கண்டார் போற்றப்படுகிறார். 12 நூற்பாக்களையும், இவற்றை விளக்கும் மேற்கோள்களாக 81 வெண்பாக்களையும் உடையது. பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயன் இயல் எனும் நான்கு பிரிவினுள் முறையே மும்மூன்று நூற்பாக்களைக் கொண்டது. இதற்குச் சிவஞானமுனிவரின் சிவஞானபோதம் மாபாடியம் என்ற பேருரை நூல் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## 4. சிவஞானிசித்தியார்

- ★ மெய்கண்டாரின் மாணாக்கரான அருள்நந்தி சிவாசாரியார் இதன் ஆசிரியர்; திருத்துறையூரில் பிறந்த இவர் கி.பி.13ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். சித்தி – முத்தி; அதாவது சிவஞானமுத்தியைப் பெறும் வழி கூறும் நூல் எனப் பொருள்படும். சிவஞானப்போதத்தை முதல்நூலாகக் கொண்டு எழுந்த வழிநூல். இது பரபக்கம், சுபக்கம் எனும் இரு பகுப்புகளையும் 629 விருத்தப்பாக்களையும் கொண்டது. சிவஞானபோதத்தின் 12 சூத்திரங்களை 12 அதிகாரங்களில் விரித்துரைக்கின்றது.

- ★ 'சிவத்தின்மேல் தெய்வமில்லை, சிவஞானசித்திக்குமேல் சாத்திரமில்லை' என்று சிவபோகசாரமும், 'பார்விரித்த நூலெல்லாம் பார்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப் பாதி போதும்' என்று சிவபோகசாரப் பாடற் பகுதியும் இதன் பெருமையினைக் குறிக்கின்றன.

FUTURE VISION

## 5. இருபா இருப.்.து

☞ இந்நூலும் அருள்நந்தி சிவாசாரியரால் இயற்றப்பெற்றது. ப.்.து – பத்து, இருப.்.து - இருபது. நேரிசை வெண்பா (10 பாக்கள்),நேரிசை ஆசிரியப்பா (10 பாக்கள்) ஆகிய இருவகைப் பாக்களும் மாறிமாறி வர 20 செய்யுள்களில் இயற்றப்பெற்றுள்ளது. அதனால் இப்பெயர் பெற்றது; அந்தாதி தொடையில் அமைந்தது. தம் ஆசிரியர் மெய்கண்டாரை முன்னிலைப்படுத்தி வினவிட, அதற்கு அவர் விடைகூறும் பாங்கிலே அமைந்தது இந்நூல்.

## 6. உண்மை விளக்கம்

- மெய்கண்டாரின் மற்றொரு மாணக்கரான திருவதிகை மனவாசகம் கடந்தார் இந்நூலின் ஆசிரியர். கி.பி.13ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.
- இருபா இருப.்.து நூல் போல், வினாவிடையாக அமைவது. தம் ஆசிரியரிடம் எழுப்பிய வினாக்களுக்கு, அவர் விடை நல்குவது போலான பாங்கில் சைவ சித்தாந்தத்தின் உண்மைகளை விளக்கிக் கூறுவதால் உண்மை விளக்கம் எனப் பெயர் பெற்றது. 60 வெண்பாக்களைக் கொண்டது.
- சைவ சித்தாந்தம் கூறும் 36 தத்துவங்களையும் பதி, பசு, பாசம் போன்றவற்றையும் விளக்கிக் கூறுகிறது.

## 7. சிவப்பிரகாசம்

- மறைஞான சம்பந்தரிடம் (மறைஞான தேசிகர்) உபதேசம் பெற்ற கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியரால் இயற்றப்பெற்ற நூல். கி.பி.14ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.
- மாயையின் பிரிவுகளைக் கூறி, அவற்றை நீக்கி சிவ ஒளியை அடைவதற்கான சிவதீட்சைகளைக் கூறுவதால் சிவப்பிரகாசம் எனப்பெயர் பெற்றது. 100 விருத்தப்பாக்களைக் கொண்டது. சிவஞானபோதத்தின் வழிநூல் சிவஞான சித்தியார், அதன் சார்பு நூலாகச் சிவப்பிரகாசம் விளங்குகிறது.

## 8. திருவருட்பயன்

- ஆசிரியர் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார். இறைவனின் திருவருள் பயனைப் பெறும் விதமாகப் பாடப்பட்டுள்ளது. பத்து அதிகாரங்களில் ஒவ்வொரு அதிகாரத்திற்கும் பத்துக் குறள்வெண்பா வீதம் 100 குறள் வெண்பாக்களைக் கொண்டது.

## 9. வினா வெண்பா

- இயற்றியவர் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார். தம் ஆசிரியரிடம் சித்தாந்த உண்மைகள் குறித்து வினவும் வகையில் அமைந்த நூல் என்பதாலும் வெண்பாவில் பாடப்பெற்றதாலும் இப்பெயர் பெற்றது. 13 வெண்பாக்களை உடையது.

## 10. போற்றிப் ப.்.றொடை வெண்பா

- இந்நூலையும் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் படைத்துள்ளார். பாடலின் இடையிடையே 'போற்றி போற்றி' என அமைவதாலும் கலிவெண்பாவினால் இயற்றப்பெற்றதாலும் இப்பெயர் பெற்றது; 95 கண்ணிகளைக் கொண்டது. ஆசிரியர் தம் ஞானகுருவின் அருட்செயல்களை அகங்குளிர நினைந்து நினைந்து போற்றுகிறார்.

## 11. கொடிக்கவி

- கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியாரின் நூல். தில்லைவாழ் அந்தணர்கள் இவர்மீது பகையுணர்வு கொண்டிருந்தனர். எனவே, தில்லையில் அந்தணர்கள் கொடியேற்றும்போது கொடி ஏறாமல் நின்றது. பின்னர் அசரீரி வாக்கின்படி உமாபதிசிவத்தை அழைத்து வந்து, கொடி ஏற்ற வேண்டினர். இவர் கொடி ஏறும்படி பாடிய பாட்டுக்களால் கொடி ஏறியது. அதனால் கொடிக்கவி எனப்பட்டது. ஒரு கட்டளைக் கலித்துறை, மூன்று வெண்பா ஆக நான்கு செய்யுள்களால் ஆன மிகச் சிறிய நூல்.

FUTURE VISION

## 12. நெஞ்சுவிடுதூது

❖ இந்நூலும் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியாரால் இயற்றப்பெற்றதாகும். தம் ஞானாசிரியரிடம், பெண்டிரின் வருத்தம் தீர மாலை வாங்கி வருமாறு தமது நெஞ்சைத் தூதாக விடுப்பதால், நெஞ்சுவிடு தூது எனப்படுகிறது. ஞானாசிரியனாகச் சிவனைப் போற்றுவது.

❖ கலிவெண்பாவில் அமைந்த 129 கண்ணிகளைக் கொண்ட நூல்.

## 13. உண்மைநெறி விளக்கம்

❖ இந்நூலையும் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் இயற்றியுள்ளார். சைவ சித்தாந்தத்தின் உண்மை நெறிகளை விளக்கும் நூல் என்பதால் உண்மைநெறி விளக்கம் எனப் பெயர் பெறுகிறது. ஆறு பாக்களில் தசகாரியம் என்று சைவ சித்தாந்த சாத்திரத்துள் கூறப்படும் பத்தையும் இந்நூல் விளக்குகிறது.

## 14. சங்கற்ப நிராகரணம்

❖ இந்நூலையும் சேர்த்து கடைசியாகக் கூறப்பட்டிருக்கும் எட்டு நூல்களையும் இயற்றியவர் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் ஆவார்.

❖ சங்கற்பம் - கொள்கை; நிராகரணம் - மறுப்பு . அதாவது, பிற சமயக் கொள்கைகளை மறுத்து, சைவ சித்தாந்தத்தின் தனித்தன்மையை விளக்கிக் கூறுவதால் சங்கற்ப நிராகரணம் என அழைக்கப்படுகிறது. 20 ஆசிரியப் பாக்களைக் கொண்டது.

❖ இவை பதினான்கும் சைவ சித்தாந்த சாத்திரத்தின் விளக்க நூல்களாக அமைந்து சைவ சமயத் தத்துவத்தையும் சிறப்பையும் உணர்த்துவனவாக விளங்குகின்றன.

# நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

## வைணவ இலக்கியம்

➢ வைணவ சமத்தின் முழுமுதற் கடவுள் திருமால் ஆவார். திருமாலி கல்யாண குணங்களில் ஆழங்கால் பட்டவர்கள் ஆழ்வார்கள். அவ்வாழ்வார்கள் பன்னிருவர் பாடிய தொகுப்பே நாலாயிர திவ்வியப் பிரபந்தம் எனப்படுகின்றது. இதனைத் தொகுத்தவர் நாதமுனி; தொகுப்பித்தவர் யாரென்று அறியப்படவில்லை. நாதமுனி யோக ரகசியம், நியாய தத்துவம் ஆகிய இரண்டு நூல்களையும் இயற்றியுள்ளார்.

## பொய்கையாழ்வார்

➢ காஞ்சிபுரத்தில் சித்தார்த்தி ஆண்டு ஐப்பசித் திங்கள் திருவோண நட்சத்திரத்தில் திருவெ.்கா எனும் இடத்தில் தாமரைப் பொய்கையில் பிறந்தார். அதனால் பொய்கை ஆழ்வார் எனப்படுகிறார். இயற்பெயர் அறியப்படவில்லை. திருமாலின் பாஞ்சசந்நியம் எனும் சங்கின் அம்சமாக அவதரித்தவர். முதல் திருவந்தாதியைப் பாடியவர்; இதில் 100 பாக்கள் உள்ளன.

➢ திருக்கோவிலூர் நந்தவனத்தில் மிருகண்டு முனிவர் அமைத்திருந்த ஆசிரமத்தில் மழைக்காலத்தே முதலாழ்வார்கள் மூவரும் கூடுகின்றனர். ‘ஒருவர் கிடக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம்’ எனக்கூறி மூவரும் நின்றபோது நான்காவதாக ஒருவர் அவர்களிடையே நெருக்கி நிற்கின்றார். அவ்வாறு வந்து நின்றவர் திருமாலே என்பதை உணர்ந்து ஒவ்வொருவரும் ஒரு வெண்பா இயற்றுகின்றார். பொய்கையாழ்வார் அப்போது பாடிய,

**வையம் தகளியா வார்கடலே நெய்யாக**
**வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய**
**சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை**
**இடராழி நீங்குகவே என்று**

என்ற வெண்பா சிறப்பு வாய்ந்தது.

FUTURE VISION

## பூதத்தாழ்வார்

- ★ மாமல்லன் என்று அனைவராலும் பாராட்டப்படும் நரசிம்மவர்ம பல்லவனால் தோற்றுவிக்கப்பட்ட தொண்டை நாட்டு (காஞ்சிபுரம் மாவட்டம்) மாமல்லபுரத்தில் சித்தார்த்தி ஆண்டு ஐப்பசித் திங்கள் அவிட்ட நட்சத்திரத்தில் பிறந்தவர்; திருமாலைப் பூதம் எனப் பல இடங்களில் பாடியிருப்பதால் பூதத்தாழ்வார் எனப் பெயர் பெற்றார்; இயற்பெயர் தெரியவில்லை. திருமாலின் கௌமோதகி என்னும் கதாயுதத்தின் அம்சமாகத் தோன்றியவர். இரண்டாம் திருவந்தாதி இவர் பாடிய நூலாகும். இதில் 100 பாக்கள் உள்ளன.

திருக்கோவிலூரில் மூன்று ஆழ்வார்களும் சந்தித்தபோது, இவர் பாடிய பாடல் வருமாறு:

**அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக**
**இன்புருகுஞ் சிந்தை இடுதிரியா – நன்புருகி**
**ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு**
**ஞானத்தமிழ் புரிந்த நான்**

## பேயாழ்வார்

- ★ சென்னை மயிலாப்பூரில் சித்தார்த்தி ஆண்டு ஐப்பசித் திங்கள் சதய நட்சத்திரத்தில் பிறந்தவர். திருமாலின் மீது கொண்ட பக்தியால் அழுது, சிரித்து ஆடிப்பாடிப் பேய் பிடித்தவர் போல விளங்கியதால் இப்பெயர் பெற்றார். இயற்பெயர் அறியப்படவில்லை. இறைவனின் நந்தகம் என்னும் வாளின் அம்சமாகத் தோன்றியவர். இவர் பாடிய 100 பாடல்கள் மூன்றாம் திருவந்தாதி எனப்படுகிறது. திருமாலின் கோலத்தைக் கண்டு களித்த இவர்,

**திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்**
**அருக்கன் அணிநிறமும் கண்டேன் - செருக்கிளரும்**
**பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்**
**என்னாழி வண்ணன்பால் இன்று**

என்று பாடுகிறார்.

- ★ இவர்கள் மூவரையும் முதலாழ்வார்கள் மூவர் என்று சிறப்பிப்பர்; மூவரும் ஒரே காலத்தவர். கி.பி.ஆறாம் நூற்றாண்டிற்கும் முற்பட்டவர் என்று கூறுவர்.

## திருமழிசையாழ்வார்

- தொண்டை நாட்டுத் திருமழிசை எனும் ஊரில் சித்தார்த்தி ஆண்டு தைத்திங்கள் மக நட்சத்திரத்தில் பார்க்கவ முனிவர், கனகாங்கி அம்மையார் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவர். திருமாலின் சுதர்சனம் எனப்படும் சக்கரத்தின் அம்சமாக உதித்தவர். பத்திசாரர் என்னும் பெயரும் இவருக்கு உண்டு.

- நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம் ஆகிய நூல்களைப் பாடியவர். இவருடைய சீடன் கணிக்கண்ணன் ஆவார். ஒரு சமயம் காஞ்சி பல்லவ மன்னனுடன் கொண்ட மனவேறுபாட்டால் கணிக்கண்ணன் காஞ்சியை விட்டே புறப்பட நேர்ந்தது. உடனே திருமழிசையும் புறப்பட எண்ணிக் கீழ்வருமாறு பாடினாராம்.

**கணிகண்ணன் போகின்றான் காமரும்பூங் கச்சி**
**மணிவண்ணா நீ கிடக்க வேண்டா – துணிவுடைய**
**செந்நாப் புலவனும் போகின்றான் நீயும் உன்றன்**
**பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்.**

பின்னர் பல்லவ மன்னன் தனது செயலுக்கு மனம் வருந்தி வரவேண்டும் என்றழைக்க திருமழிசையுடன் சீடனும் இறைவனும் காஞ்சிக்குத் திரும்பினராம்.

## பெரியாழ்வார்

- விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில், குரோதன ஆண்டு ஆனித் திங்கள் சுவாதி நட்சத்திரத்தில் முகுந்தபட்டர், பதுமவல்லி அம்மையார் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவர். கருடனின் அம்சமாகத்

FUTURE VISION

தோன்றியவர். விஷ்ணுசித்தர் என்பது இவருடைய இயற்பெயராகும்; பட்டாபிரான் எனவும் அழைக்கப்படுகிறார். இவர் ஆண்டாளின் வளர்ப்புத் தந்தை ஆவார்.

- திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி ஆகிய நூல்களைப் பாடியவர்.

- பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகப் பாவித்து,

**மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி**
**ஆணிப் பொன்னால் செய்த வண்ணச் சிறுதொட்டில்**
**பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்**
**மாணிக் குறளனே தாலே லோ**
**வையம் அளந்தானே தாலே லோ.**

என்று பாடினார். இப்பாக்கள் பிற்காலத்தில் பிள்ளைத்தமிழ் இலக்கியம் தோன்றுவதற்கு முன்னோடியாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

## ஆண்டாள்

- விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் நள ஆண்டு ஆடித் திங்கள் பூரம் நட்சத்திரத்தில் தோன்றியவர். பூமாத்தாய் அம்சமாகத் துளசி செடிகளுக்கு மத்தியில் உதித்தவர். கோதை என்பது இயற்பெயராகும். ஆண்டாள், சூடிக்கொடுத்த சுடர்க்கொடி, நாச்சியார், பட்டர்பிரான் கோதை, விஷ்ணுசித்தன் கோதை, வில்லிபுத்தூர் கோன் கோதை என்ற பெயர்களையும் பெற்றவர். பெரியாழ்வாரால் வளர்க்கப் பெற்றவர்.

- திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்பன இவருடைய நூல்கள். ஆண்டாள் திருமாலிடம் கொண்ட காதலை,

**கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?**
**திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ?**
**மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்**
**விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே**

என்று வெண்சங்கைப் பார்த்துக் கேட்கின்றனர்.

## நம்மாழ்வார்

- திருநெல்வேலி மாவட்டம் திருக்குருகூர் எனப்படும் ஆழ்வார் திருநகரியில் பிரம்ம ஆண்டு வைகாசித் திங்கள் விசாகம் நட்சத்திரத்தில் மாறன்காரிக்கும், உடையநங்கைக்கும் மகனாகப் பிறந்தவர். விஷ்வக்சேனர் அம்சமாகத் தோன்றியவர்.

- சடகோபன், பராங்குசன், தமிழ்மாறன், காரிரத்தினம் போன்ற வேறுபெயர்களும் உண்டு; ஆழ்வார்களில் தலைமை சான்றவர் இவரை அவயவி (உடல்) என்றும், மற்ற ஆழ்வார்களை அவயவம் (உறுப்பு) என்றும் கூறுவர்.

- திருவாசிரியம், திருவாய்மொழி, திருவிருத்தம், பெரிய திருவந்தாதி என்னும் நான்கு நூல்களை இயற்றியுள்ளார். இவற்றைச் சதுர் வேதத்திற்கு நிகராகக் கூறுவர். திருவாய்மொழி திராவிட வேதம், வைணவர்களின் வேதம், சாம வேதம் என்றெல்லாம் சிறப்பிக்கப்படுகிறது. எல்லாவற்றையும் இறைவனாகவே காணும் இயல்பினை,

**பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற**
**காவி மலரென்றும் காண்தோறும் - பாவியேன்**
**மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும் அவ்வவை**
**எல்லாம் பிரான் உருவே.**

என்ற பாவில் காணலாம்.

## மதுரகவியாழ்வார்

- திருக்குருகூரையடுத்த திருக்கோளூரில் (திருக்கோவூர்) ஈஸ்வர ஆண்டு சித்திரைத் திங்கள் சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தார். கருடன் அம்சமாகத் தோன்றியவர்களில் இவரும் ஒருவர். செவிக்கு இன்பம் தரக்கூடிய பாசுரங்களைப் பாடியதால் இப்பெயர் பெற்றார்; இயற்பெயர் அறியப்படவில்லை.

FUTURE VISION

- சைவ சமயத்தில் திருநாவுக்கரசரையே இறைவனாகப் போற்றிய அப்பூதியடிகளைப்போல், வைணவத்தில் நம்மாழ்வாரை இறைவனாக வணங்கியவர் மதுரகவியாழ்வார். கண்ணி நுண் சிறுத்தாம்பு என்னும் பதினொரு பாசுரங்களைக் கொண்ட நூலைப் பாடியுள்ளார்.

**கண்ணி நுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்**
**பண்ணிய பெருமாயன் என்னப்பன் இல்**
**நண்ணித் தென்குருகூர் நம்யென்றக்கால்**
**அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே**

என்பது நூலின் முதல் பாடலாகும்.

## திருமங்கையாழ்வார்

- சோழ நாட்டின் திருவாலி நாட்டில் திருக்குறையலூரில் நள ஆண்டு கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நட்சத்திரத்தில் ஆலிநாடான் மகனாகக் கள்ளர் மரபில் தோன்றியவர். இயற்பெயர் கலியன் என்பதாகும். வில்லின் அம்சமாய் உதித்தவர். நீலன், பரகாலன், கலிகன்றி, கலியன், நாலுகவிப்பெருமாள் போன்ற வேறுபெயர்களும் உண்டு.

- பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்பன இவர் இயற்றிய நூல்களாகும்.

**வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்**
**பெருந்துயர் இடும்பையில் பிறந்து**
**கூடினேன் கூடி இளையவர் தம்மொடு**
**அவர்தரும் கலவியே கருதி**
**ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்**
**உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து**
**நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன்**
**நாராயணா என்னும் நாமம்**

என்ற பாத்திரத்தில் நாராயணா மந்திரத்தால் துன்பம் நீங்கியதாகக் கூறுகிறார்.

## தொண்டரடிப்பொடியாழ்வார்

- சோழநாட்டில் (திருச்சி மாவட்டம்) திருமண்டலங்குடி என்னும் ஊரில் பிரபவ ஆண்டு மார்கழித் திங்கள் கேட்டை நட்சத்திரத்தில் வனமாலை அம்சமாய்த் தோன்றியவர். இவரது தந்தையார் வேதவிசாரதன் என்பவர் ஆவார். விப்பிநாராயணர் என்பது இவர் இயற்பெயராகும்.

இவர் அருளியன திருப்பள்ளியெழுச்சி, திருமாலை என்பன.

**பச்சைமாமலை போல்மேனி பவளமாய் கமலச் செங்கண்**
**அச்சுதா அமரர்ஏறே ஆயர்தம் கொழுந்தே என்னும்**
**இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்**
**அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே**

என்று திருமாலைப் போற்றிப் பரவுகிறார்.

## திருப்பாணாழ்வார்

- சோழநாட்டு உறையூரில் துன்மதி ஆண்டு கார்த்திகைத் திங்கள் ரோகிணி நட்சத்திரத்தில் பாணர் குலத்தில் தோன்றியவர். ஸ்ரீவத்சம் அம்சமாய்த் தோன்றியவர்.

- அமலனாதிபிரான் என்னும் பத்துப் பாசுரங்களைக் கொண்ட நூலைக் பாடியுள்ளார்.

- குலத்தைக் காட்டி வழிபட மறுத்தபோது, இறைவனே அர்ச்சகரது கனவிலே தோன்றித் தோளில் தூக்கிவரச் செய்யப் பணித்தார்.

**கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்**
**உண்ட வாயன் என்உள்ளம் கவர்ந்தானை**
**அண்டர்கோன் அணிஅரங்கன் என் அமுதினைக்**
**கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே**



FUTURE VISION

# MATERIAL தேவைக்கு

**TNPSC: GR –I & II (P), GR –IV**

**(TAMIL & ENGLISH MEDIUM),**

**PG: TRB - TAMIL, ENGLISH,**

**MATHS & COMPUTER SCIENCE**

**TET (P1 & P2),**

# CONTACT -90420 30163

*************************************************************

**FUTURE VISION STUDY CENTRE**

**2ND FLOOR, AVK MARUTHI PLAZA,**

**OPP. HOTEL LAKSHMI PRAKASH,**

**SKS HOSPITAL ROAD,**

**SALEM – 636 004**